தேதி : **11.4.2014**

**தலைமைக் கழகச் செய்தி**

நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் - 2014

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்**
**மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர்**
**புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்
**திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி**
**22-ஆம் நாள் : 11.4.2014 – வெள்ளிக் கிழமை**

வருகின்ற **24.4.2014** அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் இன்று (**11.4.2014** – வெள்ளிக் கிழமை), திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, சென்னையில் இருந்து வான் வழியாகப் புறப்பட்டு திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாளையங்கோட்டையைச் சென்றடைந்த போது, அங்கு திருநெல்வேலி மாநகர், திருநெல்வேலி புறநகர் ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் வரவேற்பும், திருக்கோயில்களின் சார்பில் பூரண கும்ப மரியாதையும் அளிக்கப்பட்டது.

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், பொதுக்கூட்டம் நடைபெறும் இடமான **'பெல் நகர் மைதானம், மாவட்ட நீதிமன்றம் எதிரில், பாளையங்கோட்டை'** என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரச்சாரப் பொதுக்கூட்ட மேடையைச் சென்றடைந்து, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கடல் அலை போல் லட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்களிடையே, கழக வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்யும் போது,

"திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்களே, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களே, கழக நிர்வாகிகளே, தலைமைக் கழக நிர்வாகிகளே, கழகப் பொருளாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, அன்புச் சகோதரர் அமைச்சர் திரு. செந்தூர் பாண்டியன் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தமிழ் மாநில பொதுச் செயலாளரும், உசிலம்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. கதிரவன் அவர்களே, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் துணைத் தலைவரும், நாங்குநேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. நாராயணன் அவர்களே, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனத் தலைவர் திரு. ஜான் பாண்டியன் அவர்களே, அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. இசக்கிமுத்து அவர்களே, பசும்பொன் தேசிய கழகத் தலைவர் திரு. ஜோதி முத்துராமலிங்கத் தேவர் அவர்களே, தமிழக கட்டடத் தொழிலாளர்கள் பொதுநல மத்திய முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் திரு. நெல்லை மகாலிங்கம் அவர்களே,

பாரதிய பார்வர்ட் பிளாக் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு. முருகன்ஜி அவர்களே, மனிதநேய மக்கள் முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. சாதிக் அவர்களே, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம், தமிழ் நாடு தவ்ஹீத் ஜமாஅத், இந்திய தேசிய லீக், இந்தியன் யூனியன் காயிதே மில்லத் லீக், அகில இந்திய தேசிய லீக், இந்திய தேசிய முஸ்லிம் லீக், தமிழ் மாநில முஸ்லீம் லீக், இந்திய தவ்ஹீத் ஜமாஅத், கிறிஸ்தவ முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் தலைவர்களே, தொண்டர்களே, பொதுமக்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR–ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளே, எனதருமை வாக்காளப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற உள்ள மக்களவைத் தேர்தல், வெறும் ஆட்சி மாற்றத்திற்காக நடைபெறுகின்ற சாதாரணத் தேர்தல் அல்ல. இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருகின்ற தேர்தல். அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்களில் இருந்து இந்தியாவை காக்கின்ற தேர்தல். பொருளாதார சீரழிவிலிருந்து இந்தியாவை மீட்கும் தேர்தல். இந்திய நாட்டை விடுவிப்பதற்காக நடைபெறுகின்ற தேர்தல். உங்களின் துன்பங்களை போக்குகின்ற தேர்தல். துயரங்களிலில் இருந்து உங்களை விடுவிக்கின்ற தேர்தல். ஊழல் சாம்ராஜ்யத்தில் இருந்து இந்தியாவை காப்பாற்றுகின்ற தேர்தல்.

காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியில் என்னென்ன பிரச்சனைகளுக்கு நீங்கள் ஆளாகி இருக்கிறீர்கள் என்பதை சொல்லி மாளாது. விலைவாசி உயர்வு; பண வீக்கம்; மாதா மாதம் பெட்ரோல் டீசல் விலை உயர்வு; வேலை வாய்ப்பின்மை; தொழில் வளர்ச்சியின்மை; வேளாண் உற்பத்தியில் மந்த நிலை என மத்திய காங்கிரஸ் ஆட்சியால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இது போன்ற மோசமான அரசை நாம் பார்த்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது.

இப்படி எல்லா விதத்திலும் சாமானிய மக்களுக்கு எதிரான மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் சில மாதங்களுக்கு முன்பு வரை அங்கம் வகித்து ஒட்டி உறவாடிய கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள். தமிழ் நாட்டிற்கே தலைகுனிவை ஏற்படுத்தும் வகையில்; 2 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. இப்படி காங்கிரசும், தி.மு.க–வும் சேர்ந்து சாமானிய ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு எதிராக செயல்பட்டதன் காரணமாக இந்திய நாட்டின் பொருளாதாரமே ஸ்தம்பித்துவிட்டது.

இப்படிப்பட்ட கொடுங்கோல் அரசிடமிருந்து இந்திய நாட்டை காப்பாற்றுவதற்கான தருணம் வந்துவிட்டது. தமிழ் நாட்டிற்கு தேவையானவற்றை மத்திய அரசிடம் கேட்டுப் பெறுகின்ற காலம் கனிந்துவிட்டது. இந்த வாய்ப்பின் மூலம் நீங்கள் உங்கள் ஜனநாயக உரிமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து செலுத்த வேண்டும் என்று சொல்லுவதற்காகவே உங்களையெல்லாம் சந்திக்க இன்று இங்கே வந்திருக்கிறேன்.

2011–ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எந்த அளவிற்கு வெற்றி பெற வைத்தீர்களோ, அதைவிட மகத்தான வெற்றியை இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளினை உங்கள் முன் வைப்பதற்காகவே இன்று நான் இங்கே வந்திருக்கிறேன். எனது இந்த வேண்டுகோளினை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு. செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

தமிழகத்திலே மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. கடந்த 34 மாத கால ஆட்சியில் மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையும் மீறி, திமுக–வின் சதித் திட்டங்களையும் மீறி, தமிழக மக்களுக்கு என்னென்ன நலத் திட்டங்களை, வளர்ச்சித்

திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை என்னால் அளிக்க முடியுமோ, அவற்றையெல்லாம் அளித்து இருக்கிறேன்; தொடர்ந்து அளித்தும் வருகிறேன்.

விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்; திருமண உதவித் தொகையுடன் கூடிய தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்; விலையில்லா மிக்ஸி கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டம்; ஏழை கிராமப்புற மக்களுக்கு கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம்; சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்வு; மேல்நிலை வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்; விலையில்லா மடிக் கணினிகள் வழங்கும் திட்டம்; கட்டணமில்லா கல்வி; மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி; முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு திட்டம்; முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்; இந்துக்கள் மானசரோவர் மற்றும் முக்திநாத் புனிதப் பயணம் மேற்கொள்ள மானியம் வழங்கும் திட்டம்; முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்; தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு லட்சம் காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம்; நெசவாளர்களுக்கென 10,000 பசுமை வீடுகள் கட்டித் தரும் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமூகநீதி நிலைநாட்டப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினர் நலன் என்று எடுத்துக் கொண்டால், உலமாக்களுக்கான ஓய்வூதியத் தொகையை அதிகரித்தது; உலமாக்களின் எண்ணிக்கையை அதிகரித்தது; புனித ரமலான் மாதத்தில் நோன்பு கஞ்சி தயாரிக்க பள்ளி வாசல்களுக்கு கிலோ ஒரு ரூபாய் விலையில் அரிசி வழங்குவது; வக்ஃபு வாரியத்திற்கு கூடுதல் மானியத் தொகை வழங்கியது; மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்தியது; கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் செல்ல மானியம் வழங்கி வருவது என அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திற்கு பங்கு மூலதனமாக கடந்த இரண்டு ஆண்டுகளில், 4 கோடியே 50 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுபான்மையினர் அதிக அளவில் கடன் உதவி பெற்று வருகின்றனர்.

சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த 3,430 பேருக்கு 13 கோடி ரூபாய் அளவுக்கு தனி நபர் கடன் வழங்கப்பட்டுள்ளது. 16,295 பேருக்கு 37 கோடியே 25 லட்சம் ரூபாய் சிறு வணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. முஸ்லீம் மகளிர் உதவு சங்கங்களால் திரட்டப்படும் நன்கொடைக்கு ஈடாக வழங்கப்படும் இணை மானியம் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட 8,464 பேருக்கு அதிகமாக கூடுதலாக 3,019 இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள எனது தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்தது. நாகூர் ஆண்டகை அவர்களின் பெரிய கந்தூரி விழாவின் சந்தனக் கூடு நாளன்று 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான 40 கிலோ சந்தனக் கட்டைகள் விலை ஏதுமின்றி வழங்கப்பட்டன.

தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 3.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தி தர வேண்டும் என்று, இஸ்லாமிய அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இவர்களது கோரிக்கை மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தவறான கொள்கைகளால் உயர்ந்து வரும் விலைவாசியிலிருந்து தமிழக மக்களை பாதுகாக்கும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 20 கிலோ விலையில்லா அரிசி; வெளிச் சந்தையில் ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு விற்பனை; சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், உளுத்தம் பருப்பு 30 ரூபாய்க்கும் விற்பனை; குறைந்த விலையில் காய்கறிகள் கிடைத்திட பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்; சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி முழுவதுமாக ரத்து என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். இதன் காரணமாக தமிழகத்தில் விலைவாசி உயர்வு ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.

தொழில் துறையில் சிறந்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். தொழிற் கொள்கைகள் வகுக்கப்பட்டு உள்ளன. தென் தமிழகத்தில் தொழிற் பூங்காக்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தொழிற் பூங்காக்களில்

தொழில் மேற்கொள்ள விரும்பும் தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு சலுகைகளை நாங்கள் அறிவித்துள்ளோம்.

கடந்த 34 மாதங்களில், 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 31,706 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இது நாள் வரை 10,660 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கப் பெற்று, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பல ஆயிரம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன. மேலும், 11,261 கோடி ரூபாய் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனம் மூலம் 21 நிறுவனங்கள் 3,108 கோடியே 88 லட்சம் ரூபாய் முதலீட்டினை தமிழகத்தில் செய்யவுள்ளன.

தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தால், தற்போது தமிழ்நாட்டில் அதிக அளவு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரிய வரும். 2008–2009 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில் 26,122 என்று இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, மார்ச் 2013 முடிவில் எனது ஆட்சியில் 40,352 ஆக உயர்ந்துள்ளது. தொழில்கள் வளர்ந்துள்ளனவா என்பதைக் கணிக்க முக்கியமான அளவுகோல் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகும். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில தொழிலாளர் ஆயுள் காப்பீட்டு நிறுவன கணக்குப்படி, 31.3.2011 அன்று அதாவது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 84 லட்சத்து 21 ஆயிரத்து 904 என்று இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை, எனது ஆட்சிக் காலத்தில் 31.12.2013 அன்று 1 கோடியே 60 லட்சத்து 61 ஆயிரமாக உயர்ந்துள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 76 லட்சத்து 39 ஆயிரம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தவிர, Provident Fund அமைப்பின் கீழ் வராத வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

அண்மையில், 2011–2012 ஆம் ஆண்டிற்கான தொழில்கள் குறித்த ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டு உள்ளன. அந்த ஆய்வில் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மொத்த தொழிற்சாலைகளில், 17 விழுக்காடு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன. தொழிற்சாலைகள் மூலம் வேலைவாய்ப்புகளை வழங்குவதிலும் தமிழகம் தான் முதல் இடத்தில் உள்ளது. மொத்தத்தில் தொழிற்சாலைகளை உருவாக்குவதிலும், வேலை வாய்ப்புகளை வழங்குவதிலும், தமிழகம் தான் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இதை நான் சொல்லவில்லை. மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் புள்ளியியல் துறை தெரிவிக்கிறது.

வாக்காளப் பெருமக்களே! இதிலிருந்தே தொழில் வளர்ச்சி குறித்து தி.மு.க. மேற்கொள்ளும் பிரச்சாரம் பொய்ப் பிரச்சாரம் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

திருநெல்வேலி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில், பல்வேறு வசதிகளை கடந்த 34 மாதங்களில் நாங்கள் நிறைவேற்றி கொடுத்து இருக்கிறோம்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள 2 அறுவை சிகிச்சை அரங்கங்களை 1 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாளையங்கோட்டையில் உள்ள அரசு சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை மேம்படுத்த 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மண்டல புற்றுநோய் சிகிச்சை மையம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நவீன விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய சிறப்பு பன்நோக்கு மருத்துவமனையை திருநெல்வேலியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாளையங்கோட்டையில் செயல்பட்டு வரும் சித்த மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 5 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடி கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தங்கு தடையின்றி தண்ணீர் வழங்க ஏதுவாக, தாமிரபரணி ஆற்றிலிருந்து 6 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் நேரடியாக மருத்துவமனைக்கு தண்ணீர் எடுத்துச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை மற்றும் செய்துங்கநல்லூர் ரயில்வே நிலையங்களுக்கு இடையே பாளையங்கோட்டை–சிவந்திப்பட்டி சாலையில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாங்குநேரி–வள்ளியூர் ரயில் நிலையங்களுக்கு இடையே நாங்குநேரி–ஏர்வாடி–வள்ளியூர்–விஜயாபதி சாலையில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலப்பாளையம் மற்றும் செங்குளம் ரயில்வே நிலையங்களுக்கு இடையே 32 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலை மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 12 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பாலங்கள் கட்டப்பட்டு உள்ளன. 19 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் 7 கிலோ மீட்டர் நீளமுள்ள அம்பாசமுத்திரம் நகர் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கல்லிடைக்குறிச்சி அம்பாசமுத்திரம் பாபநாசம் முண்டந்துறை பகுதிகள் சுற்றுலாத்தலமாக உருவாக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூரில் உள்ள அரிசி ஆலை குழுமத்திற்கு 6 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் பொது வசதி மையம் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தேக்கு மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம், ஆயக்குடியிலுள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இங்கு 25 லட்சம் ரூபாய் செலவில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது.

திருநெல்வேலி ராமையன்பட்டியில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது. கல்லூரிக்கான கட்டடங்கள் கட்ட 21 கோடியே 56 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் 44 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 234 கிலோ மீட்டர் நீள சாலை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவற்றில் 199 கிலோ மீட்டர் நீள பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலை மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உலகத் தரம் வாய்ந்த முதன்மை விளையாட்டு மையத்தை திருநெல்வேலியில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 22 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் 230 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தவும், ஆண்டு ஒன்றிற்கு 11 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் அதனைப் பராமரிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கூடங்குளம் மற்றும் 12 கிராம ஊராட்சிகளில் உள்ள 100 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு தாமிரபரணி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு 68 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி தொகுதிக்குட்பட்ட கருமேனியாறு உபவடி நிலத்தில் 1 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில் நான்கு கண்மாய்கள் மற்றும் அடங்காறு அணைக்கட்டினை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ராதாபுரம் வட்டம், ஹனுமா நதியின் குறுக்கே பரிவிரி சூரியன் கிராமத்தில் 50 லட்சம் ரூபாய் செலவில் தடுப்பணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்தத் தொகுதிக்குட்பட்ட கொடுமுடியாறு அணை; வடக்கு

பச்சையாறு அணை; மற்றும் நம்பியாறு அணைகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் 7 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. மணிமுத்தாறு அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் 18 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு இதுவரை எனது அரசு 100 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. முதல் மற்றும் இரண்டாம் நிலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்று மற்றும் நான்காம் கட்டப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மக்களவைத் தொகுதியின் வளர்ச்சிக்காக, நலனுக்காக, பல்வேறு பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

மூன்றாண்டுகளில் முத்தான திட்டங்களை நாங்கள் உங்களுக்கு அளித்து இருக்கிறோம். மத்திய ஆட்சியிலே ஒன்பதாண்டு காலம் அங்கம் வகித்த கட்சி தி.மு.க. இந்த ஒன்பது ஆண்டு காலத்தில் ஐந்து ஆண்டு காலம் தமிழ் நாட்டிலும் ஆட்சியில் இருந்தது தி.மு.க. மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியில் இருந்த திமுக உங்களுக்கு ஏதாவது நன்மை செய்ததா ? இல்லை. மாறாக நாங்கள் நிறைவேற்றும் திட்டங்களை கொச்சைப்படுத்தி வருகிறது தி.மு.க.

அரசுப் பேருந்துகளிலே பயணிக்கும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு 10 ரூபாய்க்கு ஒரு லிட்டர் மினரல் வாட்டர் வழங்கும் திட்டத்தினை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். இது போன்று குறைந்த விலையில் மினரல் வாட்டர் விற்பனை செய்யும் ஒரே மாநிலம் தமிழகம் தான். வெளி ஊர்களுக்கு பயணிக்கும் போது நீங்கள் இந்த மினரல் வாட்டரை தானே வாங்குகிறீர்கள். இந்த மினரல் வாட்டர் வெளிச் சந்தையிலே 22 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில் நிலையங்களில் 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாங்கள் இதை 10 ரூபாய்க்கு தருகிறோம்.

குறைந்த விலையில் மினரல் வாட்டர் வழங்கும் திட்டத்திற்கு மக்களிடையே பெருத்த வரவேற்பு கிடைத்துள்ளது. மக்கள் மனம் உவந்து பாராட்டுகின்றனர். ஏழைகளின் நலன் காக்கும் அரசாக எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. இதனால் மக்கள் மத்தியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கு பெருகி வருகிறது. இதைக் கண்டு பொறுத்துக் கொள்ள முடியாத எதிர்க்கட்சிகள்; குறிப்பாக, தி.மு.க. இந்தத் திட்டம் குறித்து விஷமப் பிரச்சாரம் செய்து வருகின்றன. இந்த ஆட்சியில் தண்ணீர் கூட விற்பனை செய்யப்படுகிறது என்று பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர். இதில் எள்ளளவும் உண்மை இல்லை.

குடிநீர் விநியோகத்தை பொறுத்த வரையில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியை விட தற்போது கூடுதலாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 507 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தன. தற்போது எனது ஆட்சியில் 554 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 2 கோடியே 53 லட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது எனது ஆட்சியில் 3 கோடியே 22 லட்சம் பேருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒரு நாளைக்கு 1,436 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. தற்போது எனது ஆட்சியில் 1,759 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கும் வகையில் கூடுதலாக 2,880 கோடி ரூபாய் கடந்த மூன்று ஆண்டுகளில் எனது ஆட்சியில் செலவழிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கடையநல்லூர் மற்றும் சேலம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சோதனை முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 19 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வர இருக்கின்றன. மேலும், 16 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வர இருக்கின்றன. திருநெல்வேலி மாநகராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில், எனது ஆட்சியில் கடந்த மூன்று ஆண்டுகளில் 243 கோடி ரூபாய் செலவில் 5,895 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பேரூராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு 448 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. ஆனால், தற்போது எனது ஆட்சியில் 589 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

9,903 ஊரகக் குடியிருப்புகளில் தனி மின் விசை திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் எனது ஆட்சியில் ஊரகப் பகுதிகளில் 1,601 கோடி ரூபாய் செலவில் பல்வேறு குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 733 கோடி ரூபாய் அளவுக்கே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தத்தில் அனைத்து மக்களுக்கும் குழாய் இணைப்புகள் மற்றும் பொதுக் குழாய்கள் மூலம் அதிக அளவில் குடிநீர் வழங்கப்படுகிறது. இது ஒன்றும் விலைக்கு விற்கப்படுவதில்லையே!

தனியார் நிறுவனங்கள் மினரல் வாட்டரை 22 ரூபாய்க்கு விற்பனை செய்யும்போது அதே மினரல் வாட்டரை எனது அரசு 10 ரூபாய்க்கு தருகிறது. இது நல்ல திட்டம் தானே? மக்கள் நலத் திட்டம் தானே? இதை ஏன் தி.மு.க–வினர் குறை கூறுகின்றனர் என்று பார்த்தால் இதிலும் தன்னலம் தான் மேலோங்கி நிற்கிறது.

திமுக–வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. துரைமுருகன் தனது மருமகள் மூலம் காட்பாடியில் மினரல் வாட்டர் நிறுவனம் நடத்தி வருகிறார். இது போன்று தி.மு.க–வினர் பலர் மினரல் வாட்டர் நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். அரசு குறைந்த விலையில் மினரல் வாட்டர் விற்பனை செய்வதால் இவர்களுடைய நிறுவனங்களின் விற்பனை குறைந்துவிட்டது. வருவாயும் குறைந்துவிட்டது. இதற்காகத் தான் தமிழக அரசின் பத்து ரூபாய் மினரல் வாட்டர் திட்டத்தினை குறை கூறுகிறார்கள்.

சுயநலத்திற்காக ஆட்சி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தவர்கள், இன்று அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டம் குறித்து விஷமப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இவ்வாறு பொய்ப் பிரச்சாரம் செய்யும் தி.மு.க. மற்றும் இதரக் கட்சிகளை, சுயநலவாதிகளை, வரும் தேர்தலில் நீங்கள் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இந்திய நாட்டில் முதலீடுகள் குறைந்துள்ளன. ஏற்றுமதி குறைந்துள்ளது. நடப்புக் கணக்கில் அதிகமான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ரூபாய் மதிப்பு வீழ்ச்சி அடைந்துள்ளது. மொத்தத்தில் இந்தியப் பொருளாதாரமே சின்னாபின்னம் ஆக்கப்பட்டுவிட்டது. அதன் சுமை ஏழைகளின் மீது சுமத்தப்பட்டுள்ளது. "இந்த சுமையிலிருந்து விடுபட தேவை மாறுதல்! அதற்கு வழி வகுக்க இருப்பது வருகின்ற மக்களவைத் தேர்தல்!" என்பதை மறந்துவிடாதீர்கள்.

மாநில அரசால் மட்டுமே தீர்க்க இயலாத பிரச்சனைகள் பல உள்ளன. உதாரணமாக, மீனவர்கள் பிரச்சனை, அண்டை மாநில நதிநீர்ப் பிரச்சனை, கச்சத் தீவு பிரச்சனை, மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, நிலக்கரி ஒதுக்கீடு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் தான் உள்ளது. இதனை தற்போதுள்ள காங்கிரஸ் கூட்டணி அரசு செய்கிறதா? நிச்சயமாக இல்லை. மாறாக, தமிழகத்திற்கும் தமிழக மக்களுக்கும் துரோகம் தான் இழைத்துக் கொண்டிருக்கிறது மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு.

வருகின்ற மக்களவைத் தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் அல்ல. இந்தியாவின் தலையெழுத்தை; உங்கள் தலைவிதியை; மாற்றி அமைக்கப் போகிற தேர்தல்.

மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் கொடிகட்டி பறக்கிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல், காமன்வெல்த் விளையாட்டை நடத்தியதில் ஊழல், விமான என்ஜின் வாங்கியதில் ஊழல் என ஊழல் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதில் 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்தியது தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள்.

காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் மூலம் மட்டும் பல லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இந்திய அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு உள்ளது. இதனை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மக்கள் விரோத ஊழல் காங்கிரஸ் அரசை ஆட்சியிலிருந்து தூக்கி எறிவதை குறிக்கோளாகக் கொண்டு, வருகின்ற தேர்தலில் நீங்கள் உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும். அனைத்து தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சியை டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

17 ஆண்டு காலம் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க. தமிழ் நாட்டிற்கு எதையாவது செய்ததா ? இல்லை. 'மக்கள் நலம்' 'மக்கள் நலம்' என்று சொல்லி உங்களின் வாக்குகளைப் பெற்றார் திரு. கருணாநிதி. ஆட்சியில் அமர்ந்தவுடன் உங்கள் நலத்தை மறந்துவிட்டார். இப்படிப்பட்ட கட்சிக்கு இந்தத் தேர்தலில் நீங்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும், சவுக்கடி கொடுத்து விரட்ட வேண்டும் என்று உங்களை கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்றால், தமிழகத்திற்கு தேவையானவற்றை பெற வேண்டும் என்றால், அதற்கு ஒரே வழி மத்தியிலே ஆட்சி மாற்றம். அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வலிமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும். எனது கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

உங்களின் ஆதரவோடு உங்கள் ஆட்சி மத்தியில் அமையப் பெறும் போது;

- ❖ இந்திய நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வகையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், இறக்குமதியை தேவைக்கேற்ப செய்யவும்;
- ❖ விலைவாசி உயர்வை கட்டுக்குள் கொண்டு வரவும்;
- ❖ காவேரி முல்லைப் பெரியாறு போன்ற நதிநீர்ப் பிரச்சனைகளில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும்;
- ❖ தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்;
- ❖ இலங்கை போரின் போது இனப் படுகொலை செய்தவர்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் சட்டத்தின் முன் நிறுத்தி; தண்டனை பெற்றுத் தருவதற்கான தீர்மானத்தை இந்தியாவே முன்மொழியவும்;
- ❖ வல்லரசு நாடுகளுக்கு இணையாக இந்திய ராணுவத்தை, தரைப்படையை, கப்பற் படையை, விமானப் படையை நவீனமயம் ஆக்கவும்;
- ❖ தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை ஆக்கவும்;
- ❖ சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு அறவே ஒழியவும்;
- ❖ வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்கவும்;
- ❖ 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல் என காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் நடைபெற்ற ஊழல்களுக்கு காரணமானவர்களுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத் தரவும், இந்த ஊழல்கள் மூலம் மத்திய அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு கட்டவும்;

- ❖ பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை நிர்ணயக் கொள்கையை மாற்றவும், பெட்ரோலியப் பொருட்களின் விலை ஓர் ஆண்டு முழுவதும் நிலையாக இருக்கவும்;
- ❖ தனி நபருக்கான வருமான வரி உச்ச வரம்பினை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தவும், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு வெள்ளையர்கள் விரட்டப்பட வேண்டும் என்ற மனநிலை மக்கள் மனங்களில் நிலவியது. தற்போது இந்தியாவை வேட்டைக் காடாக்கி, கொள்ளையடித்து, சின்னாபின்னமாக்கி, நாட்டையே சூறையாடிய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசை ஆட்சியில் இருந்து தூக்கி எறிய வேண்டும்; எதிர்காலத்திலும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியை அமைய விடக் கூடாது என்ற மன நிலையில் நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள். இந்தியா முழுவதும் இதே நிலை தான் நிலவுகிறது. இந்திய விடுதலைக்கு முன் மக்கள் மனதில் இருந்த அதே மன நிலை இந்தியா சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகள் கழித்து தற்போது மக்கள் மனங்களில் மீண்டும் உருவாகியுள்ளது.

நடைபெற இருக்கின்ற மக்களவைத் தேர்தல் மக்கள் விரோத ஆட்சியை, முடிவுக்கு கொண்டு வரும் தேர்தல் மட்டுமல்ல, மக்களாட்சியை நிலைநாட்டும் தேர்தல். இந்திய நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குடும்ப ஆட்சிக்கு, ஊழல் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அதன் மூலம் மக்களாட்சி மலர வேண்டும். இதனை உங்களால் தான் சாதிக்க முடியும். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

மத்தியிலே மக்களாட்சி மலர்ந்தால் மட்டும் போதாது. அந்த ஆட்சி தமிழகத்தின் ஆட்சியாக, நமது ஆட்சியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஆட்சியாக அமைய வேண்டும். அப்பொழுது தான் தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும். தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும். தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு வளம் பெறும். இதன் அடிப்படையில் நீங்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள், இந்த நேரத்தில் நான் சொல்வதை கவனமாகக் கேட்க வேண்டும். அதனை மனதில் இறுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் வாக்கு என்பது உங்கள் உரிமை. உங்கள் வாக்கு என்பது இந்த நாட்டின் சொத்து. உங்கள் வாக்குதான் நாளை இந்தியாவின் தலைவிதியையே மாற்றி அமைக்கப் போகிறது. அத்தகைய சக்தி படைத்தது உங்கள் வாக்கு. அந்த வாக்கை வீணாக்கிவிடாதீர்கள்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் களம் இறங்கி உள்ளன. அந்தக் கட்சிகளெல்லாம் உங்களிடம் வந்து வாக்கு கேட்கின்றன. வேறு கட்சிக்கு நீங்கள் வாக்களித்துவிட்டால், அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. வேறு கட்சிக்கு நீங்கள் வாக்களித்தால் அந்தக் கட்சிகளும் வெற்றிபெற முடியாது. உங்கள் வாக்குகள் சிதறிவிடும். உங்கள் வாக்கு வீணாகிவிடும். எனவே, உங்கள் வாக்கை வீணாக்கிவிடாதீர்கள். மாறாக, வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் அனைவரும் 40 தொகுதிகளிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை ஆதரித்து, ‘இரட்டை இலை’ சின்னத்தில் வாக்களித்து அவர்களை வெற்றிபெறச் செய்தால், மத்தியிலே இந்தியாவை வல்லரசாக்கக் கூடிய வலிமையான ஆட்சி அமையும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஆட்சி மத்தியிலே அமைந்தால் உங்களுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் எண்ணற்ற நன்மைகள் வந்து குவியும். எனவே, நான் சொல்வதை மறவாமல், தவறாமல் வருகின்ற மக்களவை பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை ஆதரித்து இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து உங்கள் ஜனநாயகக் கடமையினை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

'அமைதி வளம் வளர்ச்சி' என்ற பாதையில் இந்தியாவை வழி நடத்திச் செல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு வாய்ப்பினை நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

"வளமான வல்லரசு வலிமையான நல்லரசு" என்ற நிலையை பாரதம் எய்திட, "தரணி போற்றும் தன்னிகரில்லா மாநிலம்" என்ற பெருமையை தமிழகம் அடைந்திட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு 'இரட்டை இலை' சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள் என்று மீண்டும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டம் என்பது வாக்காளப் பெருமக்களிடத்தில் வேட்பாளரை அறிமுகப்படுத்தி பிரச்சாரம் செய்வதற்காகத் தான். வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் இந்த மேடையில் வித்தியாசமான ஒன்றை கவனித்து இருப்பீர்கள். நான் தேர்தல் பிரச்சாரம் செய்கின்ற இந்த மேடையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரே இல்லை. இதற்கு என்ன காரணம்? இந்திய தேர்தல் ஆணையத்தின் விந்தையான விதிமுறைகளும், ஆணைகளும், கட்டுப்பாடுகளும் தான் காரணம்.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக நான் மேற்கொண்டுள்ள சூறாவளி தேர்தல் பிரச்சாரத்திற்கு மக்கள் அலை கடலென திரண்டு வருகிறார்கள். மக்கள் வெள்ளம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இதனைக் கண்டு எதிர்க்கட்சிகள் கலங்கிப் போய் இருக்கின்றன. குறிப்பாக தி.மு.க. மிரட்சி அடைந்துள்ளது. விரக்தி அடைந்துள்ளது. எனவே தான் தி.மு.க–வினர் தற்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றாலும் ஜெயலலிதா பிரதமர் ஆக முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்பதை தி.மு.க–வினரே உணரத் துவங்கிவிட்டனர்.

கோவை கூட்டத்தில் பேசிய திரு. கருணாநிதி கூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வாக்களித்தால் சாபம் இடுவேன் என்று கூறி இருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையில் பிரதமர் பதவி என்பதோ, அமைச்சர் பதவி என்பதோ முக்கியமல்ல. தமிழ் நாட்டிற்கு என்னென்ன திட்டங்களை செயல்படுத்த முடியும் என்பதும், தமிழகத்திற்கு என்ன நன்மைகள் செய்ய முடியும் என்பதும் தான் எங்களது சிந்தனை.

எனக்கு வரும் கூட்டத்தைக் கண்டு எதிர்க்கட்சிகள் மிரட்சி அடைவதிலோ விரக்தி அடைவதிலோ ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. ஆனால், இங்கு கூடுகிற கூட்டத்திற்கு தேர்தல் ஆணையம் சில கட்டுப்பாடுகளை விதிப்பது தான் வியப்பாக உள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து நான் பிரச்சாரம் செய்யும் போது, அந்தத் தொகுதி வேட்பாளர் கலந்து கொள்ளக் கூடாது, மேடையில் இருக்கக் கூடாது, அவரது புகைப்படமும் இருக்கக் கூடாது, வேட்பாளரின் பெயரை கூட நான் உச்சரிக்ககூடாது, "இத் தொகுதியின் வேட்பாளர் இவர் தான்" என்று கூட நான் சொல்லக் கூடாது என்றெல்லாம் இதுவரை தேர்தல் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு விந்தையான ஆணைகளை தேர்தல் ஆணையம் பிறப்பித்துள்ளது.

அவ்வாறு மீறி வேட்பாளருடைய பெயரை நான் உச்சரித்தாலோ அல்லது அவர் மேடையில் இருந்தாலோ அல்லது அவரது புகைப்படம் இருந்தாலோ இந்தக் கூட்டத்திற்கான அனைத்து செலவுகளையும் தேர்தல் ஆணையம் வேட்பாளர் கணக்கில் சேர்த்து விடுமாம். வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் உங்கள் சொந்த செலவில் வாகனங்களில் வந்து செல்லும் செலவும் வேட்பாளர் கணக்கில் சேர்க்கப்படும் என்று தேர்தல் ஆணையம் சொல்லி உள்ளது. இது என்ன நியாயம்?

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், என்னைப் பொறுத்த வரையில், மேடை அமைப்பு தோரணங்கள், பதாகைகள், கட்அவுட்டுகள் நாற்காலிகள் போன்ற செலவுகளை வேட்பாளர் கணக்கில் சேர்ப்பதற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், கூட்டம்

அதிகமாக கூடுகிறது என்பதைக் காரணம் காட்டி; பொதுமக்கள் தாங்களாகவே ஏற்பாடு செய்து கொண்டு கூட்டத்திற்கு வரும் செலவைக் கூட வேட்பாளர் கணக்கில் சேர்ப்போம் என்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்?

ஒரு மக்களவைத் தொகுதி என்பது ஒரு மாவட்டத்திற்கு இணையானது. நான் ஒரு மக்களவைத் தொகுதியில் பிரச்சாரம் செய்கிறேன்; ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகிறேன் என்றால் என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில், எனது உரையைக் கேட்க வேண்டும் என்ற விருப்பத்தில் அந்தத் தொகுதி முழுவதிலும் இருந்து பொதுமக்கள் தாங்களாகவே வாகனங்களை ஏற்பாடு செய்து கொண்டு அலை கடலென திரண்டு வருகிறார்கள். என்னைப் பார்க்க, எனது உரையைக் கேட்க, வருகின்ற மக்கள் கூட்டத்தை நான் எப்படி கட்டுப்படுத்த முடியும்? இதை கழக நிர்வாகிகள் எப்படி கட்டுப்படுத்துவார்கள்? குறிப்பிட்ட எண்ணிக்கையில் தான் மக்கள் வர வேண்டும்; அதற்கு மேல் வரக் கூடாது என்று நான் எப்படி சொல்ல முடியும்? இது எங்களால் இயலாத காரியம். மக்கள் ஆர்வத்திற்கு அணை போட முடியாது.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இந்தியத் தேர்தல் ஆணையம் கட்டுப்பாடுகளை விதிப்பது மக்களுக்கு எதிரான செயல். ஜனநாயகத்திற்கு எதிரான செயல். ரத்தினச் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால், மக்கள் தாங்களாகவே தங்கள் சொந்தச் செலவில் வாகனங்களில் எனது கூட்டத்திற்கு வரும் செலவு, வேட்பாளர் கணக்கில் சேர்க்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதால் நான் பேசும் கூட்டத்தில் எனது கட்சியின் வேட்பாளர் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எங்களது வேட்பாளர் மேடையில் நிற்க முடியாத சூழ்நிலையை, கூட்டத்திற்கு வர முடியாத சூழ்நிலையை, வேட்பாளரின் புகைப்படத்தைக் கூட ஒட்ட முடியாத சூழ்நிலையை வேட்பாளர் பெயரைக் கூட உச்சரிக்க முடியாத சூழ்நிலையை இந்திய தேர்தல் ஆணையம் உருவாக்கி விட்டது.

ஆனால், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, திரு. ஸ்டாலின் மற்றும் இதர அரசியல் கட்சித் தலைவர்கள் பிரச்சாரம் செய்யும் கூட்டங்களில் வேட்பாளர்கள் மேடையில் தான் நிற்கின்றனர். அந்தக் கூட்டங்களுக்கும் மக்கள் வாகனங்களில் தான் வந்து செல்கின்றனர். இது குறித்து தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு நீதி, இதர கட்சிகளுக்கு ஒரு நீதியா? இந்த விஷயத்தில் தேர்தல் ஆணையம் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**இன்று தமிழகமெங்கும் மின்சார நிலைமை பற்றிய பேச்சு நிலவுகிறது. திடீரென்று மின் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. மின்வெட்டு ஏற்பட்டு இருக்கிறது என்று பலரும் பேசுகின்றனர். இதையே ஒரு குறையாக எதிர்க்கட்சியினர் கூறி வருகின்றனர். இதைப் பற்றி சில விளக்கங்களை நான் இந்த நேரத்தில் உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.**

**இதற்கு முன்பு இரண்டு முறை நான் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறேன். 1991 முதல் 1996 வரையிலும், 2001 முதல் 2006 வரையிலும் நான் முதலமைச்சராக இருந்திருக்கிறேன். எனது முந்தைய ஆட்சிக் காலங்களில் மின் விநியோகம் சீராக இருந்தது. எனது முந்தைய ஆட்சிக் காலங்களில் மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை; மின்பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக, எனது முந்தைய ஆட்சிக் காலங்களில் தமிழகத்தின் தேவை போக, உபரியாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதால் பிற மாநிலங்களுக்கு அதனை விற்று வருவாயும் ஈட்டினோம். ஆனால், 2006–க்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நிலைமை தலைகீழாக மாறியது. இதனை வாக்காளப் பெருமக்களாகிய நீங்கள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும்.**

**2006–ல் தேர்தல் நடைபெறும் வரை, ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை, நான் ஆட்சியை விட்டுப் போகும் போது, தமிழ் நாடு மின்சார உற்பத்தியில் உபரி மாநிலமாகத் தான் இருந்தது. அதன் பின்னர், திமுக மைனாரிட்டி ஆட்சி நடத்திய காலத்தில் தான், 2006 முதல் 2011 வரையில் உள்ள மைனாரிட்டி திமுக ஆட்சிக் காலத்தில் தான் மின் நிலைமை மிகவும் மோசமடைந்தது.**

எதிர்காலத் தேவையை கருத்தில் கொண்டு எனது ஆட்சிக் காலத்தில் ஒப்பந்தங்கள் போடப்பட்ட, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட புதிய மின் திட்டங்களை எல்லாம் திரு. கருணாநிதி ஆட்சிக்கு வந்த பிறகு, இவைகள் எல்லாம் ஜெயலலிதா தொடங்கிய திட்டங்கள் என்பதற்காக கிடப்பில் போட்டுவிட்டார். அந்தத் திட்டங்களை நிறைவேற்றவில்லை. அதனால், 2007 வரை நிலைமை சரியாக இருந்தது. 2008–க்குப் பிறகு மின்பற்றாக்குறை ஏற்பட்டது. மின் உற்பத்தி குறைந்தது. அதனால் அடிக்கடி மின்வெட்டு ஏற்பட்டது. தமிழகமே இருளில் மூழ்கியது. இந்த நேரத்தில் ஒன்றை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த மின்சாரத்தின் அளவு 8,000 மெகாவாட். தற்போது, எனது ஆட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தின் மொத்த அளவு 12,000 மெகாவாட். ஆக, மின்சார பற்றாக்குறை என்ற நிலைமை இல்லை. தேவைக்கேற்ப மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. பிறகு ஏன் இந்த நிலைமை ? அதற்கு மீண்டும் வருகிறேன்.

திமுக ஆட்சிக் காலத்தில் எதிர்கால மின் தேவைகளைக் கருத்தில் கொள்ளாமல், மக்களின் தேவைகளைப் பற்றி கவலைப்படாமல், புதிய திட்டங்கள், புதிய மின் உற்பத்தித் திட்டங்களை துவங்காமல் விட்டுவிட்டதால், படிப்படியாக மின் பற்றாக்குறை ஏற்பட்டது. 2008 முதல் 2011 வரை ஒவ்வொரு ஆண்டும் மின் பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டே வந்தது. தமிழகம் இருளில் தள்ளப்பட்டது. உங்கள் எல்லோருக்கும் நன்றாக நினைவிருக்கும். நீங்களெல்லாம் அதனை அனுபவித்திருக்கிறீர்கள். அந்தத் துன்பத்தை அனுபவித்திருக்கிறீர்கள். 2011–ல் மீண்டும் நான் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது, ஒட்டு மொத்த மின் பற்றாக்குறை 4,000 மெகாவாட்டாக இருந்தது. ஆகவே, எப்படியாவது இந்த நிலைமையை சரிசெய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன். அதுமட்டுமல்ல, திமுக ஆட்சிக் காலத்தில், முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சிக் காலத்தில், சீராக நடைபெற்றுக் கொண்டிருந்த, செயல்பட்டுக் கொண்டிருந்த மின் உற்பத்தி நிலையங்கள் எல்லாம் வேண்டுமென்றே பராமரிப்பின்றி விட்டு, பழுதடையச் செய்து அதன் மூலம் வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை அதிக விலை கொடுத்து வாங்கி, கமிஷன் சம்பாதிக்கலாம் என்பதற்காகவே திட்டமிட்டே இந்த மின் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டது. அதனால், மின்சார வாரியத்திற்கு 50,000 கோடி ரூபாய் அளவுக்கு கடன் இருந்தது.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது ரிசர்வ் வங்கி இந்தியாவில் உள்ள அனைத்து நிதி நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் உத்தரவிட்டது. தமிழக மின்சார வாரியத்திற்கு கடன் அளிக்கக் கூடாதென்று. அப்படிப்பட்ட மோசமான நிலைமையில் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றேன். அப்போது நான் ஒரு சபதம் செய்தேன். வெளிப்படையாகவும் சொன்னேன். இந்த மோசமான மின்பற்றாக்குறை நிலைமையை நான் சரிசெய்தே தீருவேன் என்று உறுதி அளித்தேன். அதன்படி பகீரத முயற்சிகளை மேற்கொண்டேன். படிப்படியாக தமிழக அரசே பொறுப்பேற்று அந்தக் கடன்களையெல்லாம் அடைத்துக்கொண்டு வந்தோம். புதிய மின் திட்டங்களைத் துவங்கினோம். வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வரவழைத்தோம். நான் ஏற்கெனவே சொன்னது போல, திமுக ஆட்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு 8,000 மெகாவாட் தான். ஆனால், இப்போது எனது ஆட்சிக் காலத்தில் 12,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு மேல் மக்கள் தேவைக்கேற்ப வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்கப்பட்டு வருகிறது.

ஆகவே, கடந்த ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதம் வேளையில் நிலைமை சீர்செய்யப்பட்டுவிட்டது. அப்போது மின் வெட்டே இருக்கவில்லை. இதனை கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரின் போது, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் நான் பெருமிதத்துடன் தெரிவித்தேன். சட்டமன்றத்தில் கூறினேன். இப்படிப்பட்ட ஒரு மோசமான சூழ்நிலையில் ஆட்சிக்கு வந்த பிறகு, பகீரத முயற்சி எடுத்து எனது ஆட்சி, எனது அரசு வெற்றிகரமாக நிலைமையை சமாளித்துவிட்டது. மின் உற்பத்திக்கும், மின் தேவைக்கும் உள்ள அந்த இடைவெளியை நாங்கள் கடந்துவிட்டோம்; சரிசெய்துவிட்டோம்; இனிமேல் தமிழ்நாட்டில் மின்வெட்டே இருக்காது. இந்த சாதனையை நாங்கள் புரிந்திருக்கிறோம் என்று அறிவித்தேன். நான் சொன்னது தான் தாமதம். அதன் பிறகு சில நாட்களுக்குள் ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் வந்தது. அந்த நேரத்தில், சொல்லி

வைத்தாற்போல் ஒன்றன்பின் ஒன்றாக மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற மின் நிலையங்கள் எல்லாம் பழுதடைந்துவிட்டன. சொல்லி வைத்தாற்போல அத்தனை மின் நிலையங்களும் ஒரே சமயத்தில் பழுதடைந்துவிட்டன. அதனால் கடுமையான மின்பற்றாக்குறை ஏற்பட்டது. அப்போதே, ஏற்காடு இடைத் தேர்தலுக்கான பிரச்சாரம் மேற்கொண்ட போது நான் வெளிப்படையாக சொன்னேன். சதித் திட்டம் நடக்கிறது. வேண்டுமென்றே மின்உற்பத்தி நிலையங்களை பழுதடையச் செய்திருக்கிறார்கள். ஆகவே, நிலைமையை சரிசெய்வோம் என்று சொன்னேன். அதன் பிறகு ஓரளவுக்கு நிலைமை சரிசெய்யப்பட்டது. ஆனால், அதற்குள் நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் வந்துவிட்டது.

ஆகவே, வாக்காளப் பெருமக்களே, நீங்கள் இதை புரிந்துகொள்ள வேண்டும். இன்று மின் பற்றாக்குறை என்ற நிலைமை தமிழ் நாட்டில் இல்லை. மக்கள் தேவைக்கேற்ப மின்சார உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 12,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு மேல் தேவைப்பட்டால் வெளி மாநிலங்களில் இருந்து வாங்கிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, மின் பற்றாக்குறை இல்லை. தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படியானால், அடிக்கடி மின்வெட்டு ஏன் ஏற்படுகிறது ? திடீரென்று இரண்டு மின் நிலையங்கள் ஒரு நாளில் பழுதடைந்துவிடுகிறது. இதனால் கிட்டத்தட்ட 1,000 மெகாவாட், 2,000 மெகாவாட் மின் உற்பத்தி குறைகிறது. அந்த நேரத்தில் தமிழகமெங்கும் மின் வெட்டு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. போர்க்கால அடிப்படையில் பழுதடைந்த நிலையங்களை சரிசெய்கிறோம். அதன் பின்னர், இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் மூன்று மின் உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்து விடுகின்றன. ஏதோ ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். டிரிப் ஆகிவிட்டது; கன்வேயர் பெல்ட் அறுந்துவிட்டது; திடீரென்று தீ விபத்து ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுகிறார்கள். மீண்டும் அதை சரி செய்கிறோம். அதை சரி செய்த உடனேயே மறுபடியும் வேறு ஏதாவது ஒரு மின் நிலையத்தில் இப்படி பழுது ஏற்படுகிறது. நானும் யோசித்துப் பார்த்தேன். நான் ஏற்கெனவே இரண்டு முறை முதலமைச்சராக இருந்திருக்கிறேன். எனது முந்தைய ஆட்சிக் காலங்களில் மின் உற்பத்தி நிலையங்கள் இப்படி தினசரி பழுதடையவில்லை. மின் உற்பத்தி நிலையங்களில் தினசரி இப்படி பழுதுகள் ஏற்படாது; தவறுகள் ஏற்படாது. ஆகவே, திட்டமிட்ட சதி நடைபெறுகிறது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செயற்கையான ஒரு மின் பற்றாக்குறையை ஏற்படுத்தி வேண்டுமென்றே மின் உற்பத்தி நிலையங்களில் இத்தகைய பழுதுகளை ஏற்படச் செய்து, அதன் காரணமாக செயற்கையான மின்பற்றாக்குறையை ஏற்படுத்தி மின்வெட்டு செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்தி, இதன் மூலம் மக்களுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீது அதிருப்தி ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் இதை செய்கிறார்களோ என்று அனைவரும் இப்போது சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டார்கள். எங்கும் இதே பேச்சாக இருக்கிறது.

ஆகவே, ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் மின் பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை. தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தினசரி இப்படி மின் உற்பத்தி நிலையங்களில் பழுதுகள் ஏற்படுகின்றன என்றால் இது திட்டமிட்ட சதிதானோ என்று தோன்றுகிறது. ஆகவே, ஆராய்ந்து, விசாரித்து, பரிசீலித்து இந்த சதி வேலைக்கு, நாச வேலைக்கு யார் காரணம் என்பதை நிச்சயமாக கண்டுபிடித்தே தீருவோம். மக்களின் துன்பத்தைப் பற்றி கவலைப்படாமல், மக்கள் மின்வெட்டு என்ற துன்பத்தை சகித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது என்பதைப் பற்றி கவலைப்படாமல் வேண்டுமென்றே இப்படி நாச வேலையில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இனங்கண்டு, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின் நிலைமை சீர் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே! மறவாதீர்! வருகின்ற 24.4.2014 அன்று நடைபெற உள்ள மக்களவைப் பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR கண்ட வெற்றிச் சின்னமாம் ''இரட்டை இலை'' சின்னத்தில் வாக்களித்து அவர்களை

மகத்தான வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை உங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் உங்களுடனேயே இருப்பார்கள். உங்களையே சுற்றிச் சுற்றி வருவார்கள். உங்கள் தேவைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றித் தரப் பாடுபடுவார்கள் என்ற உத்தரவாதத்தை உங்களுக்கு நான் அளிக்கிறேன்.

உங்கள் வாக்கை தமிழகத்தின் நலனுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் பயன்படுத்துங்கள். இந்தியத் திருநாட்டை காப்பாற்றுங்கள் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொண்டு, ''அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா, ஆறிலும் சாவு நூறிலும் சாவு, தாயகம் காப்பது கடமையடா'' என்ற புரட்சித் தலைவர் MGR-ன் பாடல் வரிகளை நினைவுபடுத்தி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்." என உரை நிகழ்த்தி வாக்கு சேகரித்தார்கள். அப்போது, அங்கே திரண்டிருந்த மக்கள், 'புரட்சித் தலைவி அம்மா வாழ்க, எங்கள் வாக்கு இரட்டை இலைக்கே' என்று மகிழ்ச்சி பொங்க முழக்கமிட்டு தங்களுடைய மனப்பூர்வமான ஆதரவை தெரிவித்தனர்.

நிறைவாக, கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் முன்னிலையில், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

பின்னர், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் திருநெல்வேலியில் இருந்து புறப்பட்டு சென்னை வந்தடைந்தார்கள்.

திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்திற்கு சென்றிருந்த கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்களை வரவேற்கும் விதமாக பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டு, கழகக் கொடித் தோரணங்கள் அழகுற கட்டப்பட்டு, இசைக் கருவிகள் முழங்க, கழக உடன்பிறப்புகள் கழகக் கொடிகளையும், இரட்டை இலை சின்னத்தையும் தங்கள் கைகளில் ஏந்திய வண்ணம் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்களுடைய சூறாவளி தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்தின் 22–ஆம் நாளான இன்று, திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த மக்கள், லட்சக்கணக்கில் கடல் அலைபோல் திரண்டிருந்து பேராதரவு அளித்ததைப் பார்க்கும் போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் அனைவரும் மகத்தான வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைக்க இருப்பது உறுதி என்பதை உணர்த்துவதாக அமைந்திருந்தது.

**கழகப் பொதுச் செயலாளர், தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஒப்புதலோடு இந்தச் செய்தி வெளியிடப்படுகிறது.**

**தலைமைக் கழகம்,**
**அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம்.**